# 10 திருமுறைகளில் காணப்படும் புராண இதிகாசக் கருத்துக்கள்

புராணம் என்பது புராதனமானது (பழமையானது) எனப் பொருள்படும். முழுமையானதால், புராணம் என்ற கருத்தும் உண்டு. இறைவன், தேவர் உலகு, பூவுலகு, ஞானிகள், அரசுகள் ஆகியவற்றினைப் பற்றிய கதைகள் புராணங்களில் இடம் பெற்றுள்ளன. இதிகாசம் என்பது, இது இவ்வாறு முன்பு நடந்தது எனும் பொருளை உடையது.

புராண இதிகாசக் கதைகள் அதிக செல்வாக்குப் பெற்று, காலா காலமாக மக்களிடம் நிலவின. தமிழ்நாட்டில் சைவ, வைணவ அடியார்கள் பக்திப்பாடல்களைப் பாடியபோது, அவற்றில் புராண இதிகாசக் கதைகளை இணைத்துப் பாடினர். அதன் மூலம் தத்தமது சமயங்களின் தொன்மையையும், மேன்மையையும் எடுத்துக் காட்டுவதுடன், அவற்றை மக்களிடம் விளக்குவதும் பரப்புவதும் அவர்களது நோக்கமாக இருந்தது. இவ்வகையில் திருமுறைப் பாடல்களில் புராண, இதிகாசக் கதைகள் பல இடம் பெற்றுள்ளன.

புராண இதிகாசக் கதைகள், சிவபக்தியையும் சிவனது வீரதீரச்செயல்கள், அருட்திறன், தனித்துவம், மேன்மை என்பனவற்றையும் புலப்படுத்துவனவாகும். திருமுறைப்பாடல்களினூடாக, சிவன் நஞ்சுண்டமை, கங்கையைச் சடையில் தரித்தமை, யமனை உதைத்தமை முதலான புராணக் கதை மரபுகளும், சிவன் இராவணனுக்கு அருள்புரிந்தமை முதலான இதிகாசக் கதைமரபுகளும் விளக்கப்படுகின்றன. திருமுறைப்பாடல்களில் அடங்கும் சம்பந்தரின்“வேயுறு தோளிபங்கன்”, “இடரினும் தளரினும்” எனத் தொடங்கும் தேவாரப்பாடல்களிலும், சுந்தரரின் “கோலமால்வரை” “ஆலந்தானுகந்து” எனத் தொடங்கும் தேவாரப்பாடல்களிலும் **இறைவன் நஞ்சுண்ட புராணக் கதை** எடுத்தாளப்பட்டுள்ளது.

முன்னொரு காலத்தில் அசுரர்கள் வரங்கள் பல பெற்றிருந்தார்கள். அதனால், அவர்கள் தேவர்களைத் துன்புறுத்தினார்கள். அதனைத் தாங்க முடியாத தேவர்கள், பிரமதேவரிடம் சரண்புகுந்து அசுரர்களை வெல்லும் முறையைத் தெரிவித்து அழிவில்லா வாழ்வைத் தருமாறு வேண்டினர். பிரம தேவர் அவர்களை விஷ்ணுவிடம் அழைத்துச் சென்றார். “பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்று விட்டால் அழிவில்லாது வாழலாம். ஆனால், அதற்கு அசுரர் உதவியும் வேண்டும்” என்று விஷ்ணு கூறினார். அமிர்தம் பெற்று அழிவில்லாது வாழும் நோக்கில் தேவர்கள் அசுரர்களை அழைத்தனர். இருசாராரும் மந்தரமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் பயன்படுத்தி, திருப்பாற் கடலைக் கடையத்தொடங்கினர். தேவர்கள் பாம்பின் வாற்பக்கமும் அசுரர்கள் அதன் தலைப் பக்கமும் நின்று, பாற்கடலைக் கடையத்தொடங்கினர். அப்பொழுது மலை நேராகநில்லாது சாய்ந்த வண்ணம் ஆடியது. அதனை அவதானித்த விஷ்ணு, ஆமைவடிவமாக, கூர்ம அவதாரம் எடுத்தார். மலையின் கீழே சென்று, அதனைத் தமது முதுகிலே தாங்கிக்கொள்ள, மலை சாயாமல் நேரே நின்றது. அதன்பின் தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தை விரைவில் எடுக்கும் ஆர்வத்தால் முழுப்பலத்துடன் கடைந்தனர். அதனாற் துன்புற்று மூச்சுவிடத் திணறிய வாசுகி, தன்னுள் இருந்த நஞ்சைக் கக்கியது. அந்த நஞ்சின் அகோரத்தினாலே அசுரர்களுடைய உடல் கரியநிறமாகின. வாசுகி கக்கிய அந்த நஞ்சின் அகோரத்தை எவராலும் தாங்கமுடியவில்லை. எனவே, இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் சென்று, நிகழ்ந்ததைக் கூறி, தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர். சிவன் **ஆலகாலம்** என்ற அந்த நஞ்சை எடுத்து உண்ண, அது அவரது கண்டத்திலே தங்கியது. அதனால், சிவன் **ஆலமுண்ட கண்டன், விடமுண்ட கண்டன்** என்ற பெயர்களாற் போற்றப்படுகின்றார்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையத்தொடங்கு முன்னர், இறைவனை வழிபட்டு, அவரது ஆசியைப் பெற்றிருந்தல் வேண்டும். ஆனால், அவர்கள் அதனைக் செய்யத் தவறிவிட்டனர். எனினும், முயற்சியொன்றினைச் செய்யும்பொழுது இடையூறு ஏற்பட்டால், அவ்வேளையில் இறைவனை நினைப்பது உலக இயல்பு. அவ்வாறே, தேவர்களும், அசுரர்களும் ஆபத்து வந்தபோது இறைவனின் துணையை நாடினர். ஆனாலும், தம்மை வணங்காது விட்டனர் என்பதற்காக, இறைவன் அவர்களது துன்பத்தைப் போக்காது விடவில்லை. இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன். இதனை, **சங்கரன்** (சுகத்தைச் செய்பவர்) என திருவருட்பயன் குறிப்பிடும். எந்தச் செயலைத் தொடங்குமுன்பும், இறைவனை நினைத்து வழிபட்டு, அவரது ஆசியைப் பெற்றிருந்தல் வேண்டும் என்ற நல்ல அறிவுரை இக் கதை மூலம் விளக்கப்படுகின்றது.



இலவச விநியோகத்திற்காக

திருமுறைப்பாடல்களில் ஒன்றான சுந்தரரின், “**ஆலந்தானுகந்து** ” எனத் தொடங்கும் தேவாரப் பாடலில் **இறைவன் யமனை உதைத்த புராணக்கதை** எடுத்தாளப்பட்டுள்ளது. மிருகண்டு முனிவரின் மகன் மார்க்கண்டேயர். அவருக்கு ஆயுள் பதினாறு என்பதனால் பெற்றோர் மிகுந்த துன்பமடைந்தனர். அதனை அறிந்த மார்க்கண்டேயர், அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களின் அனுமதியுடன், சிவனை நோக்கித் தவஞ்செய்தார். சிவபெருமான் காலனுக்கு அஞ்ச வேண்டியதில்லை என்று வரம் கொடுத்தருளினார். மார்க்கண்டேயருக்குப் பதினாறு வயது முடிந்தது. சிவன் கொடுத்த வரத்தை அறிந்திராத யமன், பாசக்கயிறுடன் சென்று, மார்க்கண்டேயர் மீது அதனை வீசினான். அப்போது சிவபெருமான் தமது திருவடிகளால் யமனை உதைத்து, மார்க்கண்டேயருக்கு ஆயுளையும் அருளையும் பாலித்தார்.

சம்பந்தரின், “வேயுறு தோளிபங்கன்” எனத் தொடங்கும் தேவாரத்திலும், நாவுக்கரசரின், “சங்கநிதி பதுமநிதி” எனத் தொடங்கும் தேவாரத்திலும், திருமாளிகைத்தேவர் பாடிய “நீறணிபவளக் குன்றமே” என்ற திருவிசைப்பாவிலும் **இறைவன் கங்கையைச் சடையில்தரித்த புராணக்கதை** எடுத்தாளப்பட்டுள்ளது. பகிரதன் என்ற மன்னன் ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டுவர நினைத்து, சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். கங்கை பூவுலகத்தில் பாய்ந்தால், அது அழிந்துவிடும். அதனால், அடியார்க்கு எளியரான சிவபெருமான் பகிரதனுக்காக ஆகாயகங்கையை ஒரு திவலையாக்கி, தம் சடாமுடியில் தரித்துக் கொண்டார்.

நாயன்மார் தமது பாடல்களில், புராணக் கதைகளை மட்டுமன்றி, இதிகாசக் கதைகளையும் கையாண்டுள்ளனர். சம்பந்தரின், **“எடுத்தவன் தருக்கை”** என்ற தேவாரப் பாடலில், **இறைவன் இராவணனது கர்வத்தை அடக்கி அருள்புரிந்த இதிகாசக்கதை** குறிப்பிடப்பட்டுள்ளது. இராவணன் புட்பக விமானத்திலேறி, ஆகாயமார்க்கமாகச் சென்றான். அப்போது, கயிலைமலை தடையாக இருப்பதை உணர்ந்து, அந்த மலையை இராவணன் பெயர்த்தெடுக்க முயன்றான். அப்பொழுது சிவபெருமான் தமது திருவடிப்பெருவிரலினால் மலையை ஊன்றி, இராவணனின் கர்வத்தை அடக்கினார். இராவணன் கதறி அழுதான். சிவபக்தனான அவன், இறைவன் சாமவேதப்பிரியன் என்பதையுணர்ந்து, இனிமையாகப் பாடினான். இறைவன் மனமகிழ்ந்து, இராவணனுக்கு மந்திரவாளும் பிறவரங்களும் கொடுத்தருளினார்.

நாயன்மார், புராண இதிகாசக் கதைகளைத் திருப்பதிகங்களில் பாடி, தமிழ் நாட்டில் சைவத்தின் தொன்மையையும், மேன்மையையும் எடுத்துரைத்தனர். அவற்றை மக்களிடம் பரப்பினர். இது நாயன்மார் சைவ சமயத்தை வளர்க்க, கையாண்ட உத்தியாகும்.

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புராணம் என்பதன் பொருள் யாது?
2. சைவ, வைணவ அடியார்கள் பக்திப் பாடல்களில் புராண இதிகாசக் கதைகளை இணைத்துப் பாடியமைக்கான காரணங்கள் யாவை?

## செயற்பாடு

1. விடம் உண்ட கதை மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட அறிவுரைகளைத் தொகுத்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. திருமுறைப்பாடல்களில் வரும் புராண இதிகாசக் கதைகளுடன் தொடர்புடைய அடிகளையும் அவை இடம்பெறும் திருமுறை, திருமுறை ஆசிரியர் போன்ற விடயங்களையும் தேடித் தொகுத்து காட்சிப்படுத்துக.

### பாடச்சுருக்கம்

- புராணம் என்பது புராதனம், பழமையானது எனப் பொருள் தரும்.
- இதிகாசம் என்பது இது இவ்வாறு முன்னே நடந்தது எனும் பொருளைத் தரும்.
- புராண இதிகாசக் கதைகள், சிவபக்தியையும் சிவனது வீரதீரச்செயல்கள், அருட்திறன், தனித்துவம், மேன்மை என்பனவற்றை விளக்குவனவாகும்.



இலவச விநியோகத்திற்காக